# பூக்குட்டிகளின் கதை மொட்டுகள்

கும்பகோணம்
சுதா மாணிக்கம்



# பூக்குட்டிகளின் கதை மொட்டுகள்

கும்பகோணம்

சுதா மாணிக்கம்

Notion Press

# பூக்குட்டிகளின் கதை மொட்டுகள்

கும்பகோணம்
சுதா மாணிக்கம்

Notion Press

# 1



சாக்கோட்டை க.அன்பழகன் MLA.,

கும்பகோணம் சட்டமன்ற உறுப்பினர்

பேரன்புடன்....

பகுத்தறிவுப் பாதையை

வகுத்துக்கொண்டு

மாணவர்களின் நலனை

மனதில்கொண்டு செயல்படும்

எங்களின் பேரன்பு சகோதரர்

குடந்தை சட்டமன்ற உறுப்பினர்

மாண்புமிகு.க.அன்பழகன் MLA அவர்களுக்கு இந்நூல்

பேரன்புடனும் பெரு மகிழ்வுடன்.......

***



"**Chandini Ishwarya Books Park**"-என்ற குழந்தைகளுக்கான நூலகம் ஒன்றை தமது குடியிருப்பில் அமைத்திருக்கும் ஆசிரியர் கவிஞரான சுதாமாணிக்கம் அவர்கள், பல்வேறு நலப்பணிகளை செய்து வருகிறார்கள். இவர் இரண்டு குழந்தைகளின் படிப்பிற்கான முழுசெலவையும் ஏற்று உதவி வருகிறார். மேலும் ஏழை எளிய குழந்தைகளின் அறிவுத் திறன் மேம்படும் வகையில் குழந்தைகளை கதை சொல்ல வைத்து அதனை புத்தகமாக வடிவமைத்து குழந்தைகளின் அறிவுத்திறனை மேம்படுத்துகிறார்கள். இவரது நான்காவது நூலான "பூக்குட்டிகளின் கதை மொட்டுக்கள்" வெளியிடப்படுவதற்கு எனது வாழ்த்துக்கள். இவரது சேவைகள் என்றும் சிறப்பாக அமைய வேண்டும் என்று மனமார வாழ்த்துகிறேன்.

இப்படிக்கு அன்புடன்,

கருப்பூர் ஆர்.கே.பாஸ்கர்,

தலைவர்,பெரும்பாண்டி ஊராட்சி,

தலைவர், தஞ்சை மாவட்ட ஊராட்சி மன்ற தலைவர்களின் குழு கூட்டமைப்பு.

# அணிந்துரை

"பூக்குட்டிகளின் கதை மொட்டுகள்" என்ற சிறார் புத்தகத்தில் கதைகள் எழுதிய குழந்தைகள் எனும் தேன்சிட்டுகளுக்கு வாழ்த்துகள்.

"சொல்லின் மேல் பொருள்" "இந்தியா 75 கவிதைகளும் சிறுவர் பாடல்களும்" "எல்லாவற்றிலும் தொடரும்" என்ற மூன்று கவிதை நூல்கள் வெளியிட்ட சுதா மாணிக்கம் அவர்கள், குழந்தைகளைத் தானும் எழுதவேண்டும் என்ற உத்வேகத்தை உருவாக்கியுள்ளார். இதில் "இந்தியா 75 கவிதைகளும் சிறுவர் பாடல்களும்" என்ற நூல் குழந்தைகளின் மனம் கவர்ந்த நூலாக குழந்தைகளுக்கென்றே எழுதப்பட்ட நூலாக திகழ்கின்றது.

**"The Destiny of a Nation is shaped within the four walls of classrooms"** என்பதற்கு ஏற்ப நாளைய வலிமையான வளமான இந்தியாவினை உருவாக்கும் பொறுப்பின் திறன்களைப் பெற செய்வதற்கு தமிழக அரசும் அனைத்து அரசு கல்வி அலுவலர்களும் அன்பார்ந்த ஆசிரியப் பெருமக்களும் மாபெரும் பங்கினை மகிழ்வுடன் ஆற்றுகின்றார்கள். இத்தகைய இனிமை நிறைந்த மகிழ்வான கற்றல் சூழலை ஏற்படுத்தி மாணவர்களை மகிழ்வித்து பல துறைகளிலும் முன்னேற அடித்தளம் அமைக்கும் சிறந்த அர்ப்பணிப்பு உணர்வோடு பணியாற்றும் ஆசிரியர்களில் ஒருவராகத் திகழும் சுதாமாணிக்கம் அவர்களுக்கு எனது பேரன்புகளையும் வாழ்த்துகளையும் மகிழ்வுடன் தெரிவிப்பதில் பெருமிதம் அடைகிறேன்.

ஆசிரியை சுதா மாணிக்கம் அவர்களின் சீரிய புத்தகப்பணி மென்மேலும் தொடர வாழ்த்துக்கள்.

அன்பான வாழ்த்துக்களுடன்

திருமிகு. மா.திலகவதி M.A.MEd.,

அரசினர் உயர்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியை (ஓய்வு) மணக்காடு,

தஞ்சை மாவட்டம்.

# என்னுரை

அனைவருக்கும் என் இனிய மகிழ்வான வணக்கங்கள்."**Each seed is longing**" என்று அழகாகச் சொல்லுவார் கவிஞர் கலீல் ஜிப்ரான். குழந்தைகளின் திறன்கள் அளப்பரியவை. ஒவ்வொரு குழந்தைக்கும் பல்வேறு திறன்கள் உண்டு. அதனைக் கண்டுணர்தல் ஓர் ஆனந்தம். கதை கேட்ட குழந்தைகள் கதை சொல்லவும் எழுதவும் ஊக்கம் ஏற்படுவதற்கு முதன்மைக் காரணம் அவர்கள் வாசிப்பு அனுபவம் பெற்றதால் தான்.



அரசு வழங்கிய வண்ணமயமான பாடப்புத்தகங்கள் ,நூலகப் புத்தகங்கள் வாசித்தல் ,இந்து தமிழ் திசை, வெற்றிக்கொடி மாணவர் இதழ் வாசித்தல், ஊஞ்சல், சிறகை விரி இதழ் மற்றும் குட்டி உலகம் மாத இதழ் என்று அவர்களின் வாசிப்பு அனுபவம் கொடுத்த நம்பிக்கையிலும், நல்லாசிரியர் ஆ.கார்த்திக்ராஜா அவர்களால் உருவாக்கப்பட்டு, தற்போது பல்வேறு மாவட்ட அரசுப்பள்ளி ஆசிரியர்களின் பங்களிப்பில் , மாணவர்களின் தன்னார்வ பங்கேற்பில் செயல்படும் "www.kalviradio.com" என்ற இணையவழி (ஆன்லைன்) கல்வி வானொலியில் நானும் எம் மாணவர்களும் 2021 லிருந்து தொடர்ந்து பங்கெடுத்து சான்றிதழ்கள் பெற்று சமீபத்தில் 2023 குடியரசு தின செயல்பாடுகளில் பங்கேற்று உலக சாதனை நிகழ்விற்கான செயலானதும், **"Sudha Manickam"** என்ற எனது கல்வி சார் **you tube channel**-ல் காணொளியில் பங்கெடுப்பதும் அவர்களுக்குத் தன்னம்பிக்கைக் கொடுத்துள்ளது. தற்போது தன்னார்வத்துடன் மகிழ்வாக குட்டி குட்டியாக கதை எழுதியுள்ளார்கள்.தன் கற்பனையில் விரிந்த அழகை , தான் சொல்ல வந்த கதையை கோர்வையாக சொற்றொடர்களாக அமை[illegible] எழுதியுள்ளார்கள் என்பது எனக்குப் பெரு மகிழ்வைத் தருகிறது .

குழந்தைகளுக்கும் பெரும் மகிழ்ச்சி . பெருமகிழ்வை ஒரு புத்தகமாக அச்சிடுதல் ஓர் ஆனந்தம்.

"வாங்க வாசிக்கலாம் வாங்க" மகிழ்வும்நன்றிகளும்.

மா.சுதா

இடைநிலை ஆசிரியர்,

ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி,

பெரும்பாண்டி கும்பகோணம் வட்டம்,

தஞ்சாவூர் மாவட்டம்.

# UNIVERSAL ACHIEVERS™ BOOK OF RECORDS

An ISO 9001:2015 Certified World Record Certifying Organization

## Certificate of Achievement



### WORLD'S LARGEST AUDIO TELECASTING STUDENTS PROGRAM FOR LONGEST TIME BY ONLINE KALVIRADIO, INITIATED AND ORGANIZED BY VOLUNTEER TEAM WORK OF TN GOVERNMENT SCHOOL TEACHERS

This is to Certify and Honour **M.SUDHA**, SGT, PUPS, PERUMBANDI, KUMBAKONAM, THANJAVUR DISTRICT for Participating in a Mass World Record of WORLD'S LARGEST ONLINE AUDIO PROGRAM OF TELECASTING AROUND 5000 AUDIOS COLLECTED FROM 2000 GOVERNMENT SCHOOL STUDENTS FROM CLASS 1 TO 12 FROM AROUND 150 GOVT. SCHOOLS ACROSS TAMILNADU AND TELECASTING IT CONTINUOUSLY FOR 60 HOURS STARTING FROM 7.00 AM 26TH JANUARY TO 7.00 PM 28TH JANUARY, 2023 ON THE OCCASION OF 74TH INDIAN REPUBLIC DAY. THIS WORLD RECORD THROUGH ONLINE KALVIRADIO WAS ORGANIZED BY ONLINE KALVIRADIO TEAM – EDUCATIONAL SERVICES (www.kalviradio.com) TO PROVIDE FREE SELF LEARNING AND SKILL DEVELOPMENT ONLINE PLATFORM WITHOUT ADVERTISEMENT INTERRUPTION FOR THE GOVERNMENT SCHOOL STUDENTS BY GOVT. SCHOOL TEACHERS TEAM Mr. KARTHICKRAJA (SGT – CUDDALORE DT.), DHARMAPURI DISTRICT COORDINATING TEACHERS Mrs. GAYATHRI(BT), Mrs. ANURADHA(BT), Mrs. KAVITHA(BT), Mrs. RAJESHWARI(SGT), Mrs. PALANISELVI(BT), Mrs. KANMALAR(HM), Mrs. MALA(BT), Mrs. SHARMILA BEGUM(BT) AND 200 OTHER TEACHERS OF ALL ACROSS TAMIL NADU GUIDED THE STUDENTS IN THIS EVENT.

DATE:
28.01.2023

Dr.Babu Balakrishnan
Founder Chairman
Universal Achievers Book of Records

www.universalachieversbookofrecords.com

# FUTURE KALAM'S™
## BOOK OF RECORDS
www.futurekalamsbookofrecords.com

## Certificate of Achievement

**WORLD'S LARGEST AUDIO TELECASTING STUDENTS PROGRAM FOR LONGEST TIME BY ONLINE KALVIRADIO, INITIATED AND ORGANIZED BY VOLUNTEER TEAM WORK OF TN GOVERNMENT SCHOOL TEACHERS**

This is to Certify and Honour PANCHAYAT UNION PRIMARY SCHOOL, PERUMBANDI, KUMBAKONAM, THANJAVUR DISTRICT, ONLINE KALVIRADIO TEAM – EDUCATIONAL SERVICES (www.kalviradio.com), TAMIL NADU, INDIA for Participating in a Mass World Record of WORLD'S LARGEST ONLINE AUDIO PROGRAM OF TELECASTING AROUND 5000 AUDIOS COLLECTED FROM 2000 GOVERNMENT SCHOOL STUDENTS FROM CLASS 1 TO 12 FROM AROUND 150 GOVT. SCHOOLS ACROSS TAMILNADU AND TELECASTING IT CONTINUOUSLY FOR 60 HOURS STARTING FROM 7.00 AM 26TH JANUARY TO 7.00 PM 28TH JANUARY, 2023 ON THE OCCASION OF 74TH INDIAN REPUBLIC DAY. THIS WORLD RECORD THROUGH ONLINE KALVIRADIO WAS ORGANIZED BY ONLINE KALVI RADIO TEAM – EDUCATIONAL SERVICES (www.kalviradio.com) TO PROVIDE FREE SELF LEARNING AND SKILL DEVELOPMENT ONLINE PLATFORM WITHOUT ADVERTISEMENT INTERRUPTION FOR THE GOVERNMENT SCHOOL STUDENTS BY GOVT. SCHOOL TEACHERS TEAM Mr. KARTHICKRAJA (SGT – CUDDALORE DT.), DHARMAPURI DISTRICT COORDINATING TEACHERS Mrs. GAYATHRI(BT), Mrs. ANURADHA(BT), Mrs. KAVITHA(BT), Mrs. RAJESHWARI(SGT), Mrs. PALANISELVI(BT), Mrs. KANMALAR(HM), Mrs. MALA(BT), Mrs. SHARMILA BEGUM(BT) AND 206 OTHER TEACHERS OF ALL ACROSS TAMIL NADU GUIDED THE STUDENTS IN THIS EVENT.

**DATE**
**28.01.2023**


Dr.Babu Balakrishnan
Founder Chairman
Future Kalam's Book of Records

This Certificate must Not be Reproduced with out the written permission of ... Kalam's Book of Records. it does not necessarily denote an entry in to the Record Book


உதவி செய்யும்
இரண்டு
ஒட்டகச்சிவிங்கிகள்

ஒரு காட்டில் இரண்டு ஒட்டகச்சிவிங்கிகள் இருந்தன. இரண்டு ஒட்டகச்சிவிங்கிகளும் உணவு தேடிக்கொண்டிருந்தன. அப்போது ஒரு குரல் கேட்டது அது காட்டு ராஜா சிங்கத்தின் குரல். சிங்கராஜாவின் காலில் முள் குத்தி வலி தாங்காமல் கத்திக் கொண்டிருந்தது. அப்போது இரண்டு ஒட்டகச்சிவிங்கிகளும் சென்று முள்ளை எடுத்து விட்டன. காட்டு ராஜா சிங்கத்தின் காயத்திற்கு மருந்து போட்டு விட்டன. காட்டு ராஜா சிங்கம் நன்றி சொன்னது. பிறகு சிங்கம் தனது குகைக்கு அவர்களை வரும்படி கேட்டது. இரண்டு ஒட்டகச்சிவிகளும் குகைக்குச்சென்றன. சிங்கராஜா உணவு பரிமாறியது.காட்டு ராஜாவும் ஒட்டகச்சிவிங்கிளும் நண்பர்களாக ஆகிவிட்டனர்.





ம.ஜஜுன

நான்காம் வகுப்பு

ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி பெரும்பாண்டி
கும்பகோணம் வட்டம் தஞ்சாவூர் மாவட்டம்

# பாம்பும் கீரியும்...






ம.ஜஜூன்

நான்காம் வகுப்பு,

ஊராட்சி ஒன்றி தொடக்கப்பள்ளி பெரும்பாண்ம
கும்பகோணம் வட்டம், தஞ்சாவூர் மாவட்டம்.



ஓர் ஊரில் ஒரு பாம்பு இருந்தது. அந்த பாம்பிற்கு மிக மிக பசித்தது.அது உணவு தேடி வெகுதூரம் சென்றது.தூரத்நில் உணவு கிடைத்தது. உணவை உண்டுவிட்டு திரும்பிக் கொண்டிருந்தது. வெகுதூரம் சென்றதால், அது தன் வீட்டிற்கு வருவதற்தகான வழியை மறந்துவிட்டு ஒரு வயலுக்குச்சென்றது. அங்கு ஒரு கீரி பாம்பைப்பார்த்தது. கீரி பாம்பைத் தாக்க வந்தது.கீரிக்கும் பாம்பிற்கும் சண்டை வந்தது. பாம்பு காயம் அடைந்தது. அப்போது வானத்தில் கழுகு ஒன்று பறந்து கொண்டிருந்தது. அந்தக் கழுகு இரக்க குணம் மிகுந்தது. கழுகு காயம் அடைந்த பாம்பை பிடிக்கவில்லை. கீரியைத் தன் கால்களால் பிடித்து எடுத்துக்கொண்டு மேலே

வானம் நோக்கிப் பறந்தது

# பேராசை பெரும் நஷ்டம்...



ஒரு காட்டில் மான் தன் பிள்ளைகளுடன் வாழ
பாதுகாப்பான இடத்தை தேடிக் கொண்டிருந்தது.
அப்பொழுது வேட்டைக்காரர் மானை துரத்தினார்.
அப்போது பெரிய மரத்தின் பின் ஒரு பெரிய குகை
இருந்தது. மான் அதற்குள் சென்றது. அந்த குகைக்குள்
போகப் போக நிறைய குகைகள் இருந்தன. அதற்குள் மான்
சென்றது. அப்போது அங்கு தங்க நாணயம், வெள்ளி,
வைரம் இதெல்லாம் இருந்தது. மான் கற்கள் எல்லாம்
மின்னுகிறது என்று நினைத்தது. அப்போது பெரிய நாகம்
வந்தது. மான் பயந்து போனது. நாகம் பயப்படாதே "நான்
உன்னை எதுவும் செய்ய மாட்டேன்" என்று சொன்னது.
மானுக்கு நாகம் நம்மை ஒன்றும் செய்யாது என்று
நம்பிக்கை வந்தது. நீ தங்க நாணயம், தங்கம், வெள்ளி,
வைரம் இதெல்லாம் பார்த்துக் கொள். நான் வெளியே
சென்று வருகிறேன் என்று சொல்லி நாகம் வெளியே
சென்றது. சிறிது நேரம் கழித்து வேட்டைக்காரர் வந்தார்.
தங்க நாணயம், தங்கம், வெள்ளி, வைரம் மற்றும் மான்
இருப்பதை பார்த்தார். எல்லாவற்றையும் எடுத்துச் செல்ல
நினைத்தார். மானை கூண்டில் அடைத்தார். தங்க நாணயம்,
வெள்ளி, வைரம் என்று ஒன்று விடாமல்
எல்லாவற்றையும் எடுத்துக்கொண்டு வேட்டைக்காரர்
தப்பிக்க போனார். திரும்பி வந்த நாகம் அவரைக்
கொன்றுவிட்டது. மான் நன்றி சொல்லி தன்
பிள்ளைகளைத் தேடிச் சென்றது. அப்போது மான் அதன்
பிள்ளைகளை பார்த்தது. பிறகு மான் தன் பிள்ளைகளுடன்
மகிழ்வாக வாழ்ந்தது.




[illegible]

[illegible]

[illegible]
[illegible]

# தமிழ்மணியும்
# மாம்பழங்களும்...



ஓர் ஊரில் தமிழ்மணி இருந்தான் அவனது தெருவில் வண்டியில் மாம்பழம் வந்தது. தமிழ்மணி அம்மாவிடம் சென்றான். அம்மா மாம்பழம் வேண்டும் என்று கேட்டான். அம்மா காசு இல்லை நாளை வாங்கித் தருகிறேன் என்று சொன்னார். மறுநாள் வண்டி வரவில்லை. தமிழ்மணி காத்திருந்தான், வண்டி வரவே இல்லை. தமிழ்மணி அம்மாவிடம் மாம்பழம் வண்டி வரவில்லை என்று சொன்னான். அம்மா, "நாளைக்கு வண்டி வரும் நாளைக்கு வாங்கி தருகிறேன் மகனே" என்று சொன்னார். மறுநாள் வண்டிச் சத்தம் கேட்டது. தமிழ்மணி, "ஐ! மாம்பழம் ஐ! மாம்பழம்...... மாம்பழம் எனக்கு மிகவும் பிடிக்கும்" என்று சொல்லி அம்மாவிடம் காசு வாங்கி மாம்பழம் சாப்பிட்டான்




லெ.கிஷோர்

வகுப்பு 5,

ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி,
பெரும்பாண்டி, கும்பகோணம் வட்டம்.


# குரங்கும் அகிலனும்...



அருத்ரேசன்

வகுப்பு 5

ஊராட்சி ஒன்றிய
தொடக்கப்பள்ளி, பெரும்பாண்டி,
கும்பகோணம் வட்டம்,
தஞ்சாவூர் மாவட்டம்.



ஓர் ஊரில் அம்மாவும் மகனும் இருந்தார்கள். மகன் பெயர் அகிலன். அம்மா மகனை அழைத்தார். மகனே காட்டிற்கு செல்லலாம். விறகு வெட்டி வரலாம் என்று சொன்னார். அங்கே செல்லும் வழியில் குரங்கு ஒன்று மரத்தில் தாவியது. அகிலன் பார்த்தான். ரசித்தான். அம்மா,அகிலனிடம், " அங்கே விறகு உள்ளன,வெட்டி வா" என்று சொன்னார். அகிலன் வெட்டினான். பிறகு இருவரும் வீட்டுக்குச் சென்றார்கள். மறுநாள் அகிலன் தனியாகக் காட்டிற்குச் சென்றான். அங்கே அந்தக் குரங்கை திரும்பவும் பார்த்தான். "உனக்கு என்ன வேண்டும்? நான் தருகின்றேன்", என்று கேட்டான். "எனக்கு என்ன வேண்டும் என்று கேட்கிறீர்கள். நீங்களும் உங்கள் அம்மாவும் என் மரத்தை வெட்டாதீர்கள் நான் இங்கு தான் இருப்பேன். இந்த ஒரு உதவி மட்டும் செய்யுங்கள்", என்று சொன்னது. "சரி, நான் இனி வெட்ட மாட்டேன்", என்று அகிலன் சொன்னான். குரங்கு நன்றி சொன்னது.

# தப்பி பிழைத்த கன்றுக்குட்டி...




ஓர் ஊரில் மாடு அம்மா ஒன்று இருந்தது. அதற்கு ஒரு கன்றுக்குட்டி இருந்தது. ஒரு நாள் கன்றுக்குட்டி பசியில் காட்டிற்குள் புல் தேடிசென்றது. அப்போது வேட்டைக்காரர்கள் வந்துவிட்டார்கள். கன்றுக்குட்டி புல் தேடி சென்றபோது, வேட்டைக்காரர்கள் பக்கத்தில் சென்றது. அப்போது மாடு அம்மா, "என் குழந்தையை காணவில்லையே", என்று தேடி வருகிறது. அப்போது கன்றுக்குட்டியை வலையைப் போட்டு பிடிப்பதற்காக வேட்டைக்காரர்கள் வலையை வீசிப்போடும் போது ஓடி வந்து கொம்பால் முட்டியது, மாடு அம்மா. வேட்டைக்காரர்கள் பயந்து ஓடினர். மாடு அம்மா கன்றுக்குட்டியை அழைத்துச் சென்றது. தப்பிப் பிழைத்த கன்று குட்டி தன் அம்மாவுடன் சென்றது.



ஆ. பிரியதர்ஷினி,
ஐந்தாம் வகுப்பு,
ஊராட்சி ஒன்றிய
தொடக்கப்பள்ளி,
கும்பகோணம் வட்டம்,
தஞ்சாவூர் மாவட்டம்.



அனனியாவும் மாம்பழமும்...



பூ.பூஜாஸ்ரீ
ஐந்தாம் வகுப்பு,
ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி பெரும்பாண்டி ,
கும்பகோணம் வட்டம், தஞ்சாவூர் மாவட்டம்

ஒரு நாள் அனனியா தோட்டத்திற்குப் போனாள். அப்போது அந்த மாம்பழத்தை பார்த்தவுடன் சாப்பிட வேண்டும் என்று ஆசை வந்தது. மாம்பழத்தை தோட்டக்காரர் வந்து பறித்துக் கொண்டு போனார். அனனியாவுக்கு முகம் வாடியது சோகத்துடன் வீட்டுக்கு போனாள். அடுத்த வாரம் வந்து பார்த்தாள்.அப்போதும் தோட்டக்காரர் வந்து பறித்துக் கொண்டு போனார். மறுபடியும் வந்து பார்த்தாள். மாம்பழம் நிறைய இருந்தன. அதை பார்த்ததும் பறிக்க வேண்டும் என்ற ஆசை வந்தது. அனன்யா மாம்பழம் பறிக்கப் போனாள். தோட்டக்காரர் வந்தார். அதை பார்த்து அனன்யா பெரிய மரத்தின் பின் ஒளிந்து கொண்டாள். தோட்டக்காரர் போனவுடன் மாம்பழத்தை பறித்தாள். திடீரென்று தோட்டக்காரர் மீண்டும் வந்தார். "யார் அங்கே?" என்று கத்தினார். அதைப் பார்த்து அனன்யாவிற்கு பயம் வந்தது. அந்தத் தோட்டக்காரரிடம் சென்று பயந்தபடியே, "தோட்டக்காரர் ஐயா, நான் தான் மாம்பழம் பறித்தேன். எனக்கு ஆசையாக இருந்தது", என்று பயத்துடன் சொன்னாள். "இனிமேல் தோட்டத்திற்கு கேட்டுக் கொண்டு வா", என்று சொன்னார். "தோட்டக்காரர் ஐயா நான் மாம்பழம் பறிக்க போகிறேன் என்று சொன்னால் நீங்கள் திட்டுவீர்கள் என்று பயந்து இருந்து விட்டேன்", என்று சொன்னாள் அனன்யா. உடனே தோட்டக்காரர் "நீ சொல்லியிருந்தால் உனக்கு ஒரு பழம் நானே பறித்து தந்திருப்பேனே", என்றார். சரி என்று சொன்னாள் அனன்யா. தோட்டக்காரர் மாம்பழத்தை கொடுத்தார். அனன்யா உண்மையை ஒத்துக் கொண்டதால் தோட்டக்காரர் அனன்யாவை எதுவும் திட்டவில்லை.

# அழகு தக்காளிகள்...




செ.ஜனனி
வகுப்பு 5,
ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி
பெரும்பாண்டி, கும்பகோணம் வட்டம்,
தஞ்சாவூர் மாவட்டம்.

ஓர் ஊரில் ஒருவர் இருந்தார். அவர் தக்காளி வியாபாரம் செய்து கொண்டிருந்தார். அவர் தக்காளிகளைத் தோட்டத்திலிருந்து எடுத்துக்கொண்டு விற்பதற்கு சென்று கொண்டிருந்தார். அவர் போகும் வழியில் ஒருவர் தக்காளி கொஞ்சம் தருகிறீர்களா என்று கேட்டார். "நான் மொத்தமாகத்தான் விற்பனை செய்வேன், சில்லறையாக கொடுக்க மாட்டேன்" என்று மறுத்துவிட்டார். அதன் பிறகு மிகவும் தொலைவில் உள்ள பெரும் கடைகளுக்கு அடுத்த நாள் அவர் தக்காளிகளை விற்பதற்கு எடுத்துக்கொண்டு சென்றார். ஆனால் மறுநாள் தக்காளிகள் எல்லாம் அழுகிப் போயிருந்தது.

# வண்ண முட்டை...





செ. மீனாட்சி
வகுப்பு 5
ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி பெரும்பாண்டி
கும்பகோணம் வட்டம். தஞ்சாவூர் மாவட்டம்.

ஓர் ஆத்தோரம் ஐந்து முட்டைகளுடன் ஒரு வாத்து
ந்து வந்தது. ஒரு நாள் ஐந்து முட்டைகளில் நான்கு
டைகள் மட்டும் குஞ்சு பொரித்தன. அந்த நான்கு
களைப் பார்த்த தாய் வாத்து மிக சந்தோஷமாக இருந்தது
முட்டை மட்டும் பொரிக்கவில்லை. தாய் வாத்து
மாக இருந்தது. நாட்கள் கடந்து போனது. அப்போது ஒரு
அந்த முட்டை பொரித்தது. தாய் வாத்துக்கு மிக
ச்சியாக இருந்தது. ஐந்து குஞ்சுகளில் ஒரு வாத்து குஞ்சு
டும் வண்ண நிறத்தில் அழகாக இருந்தது. அந்த வாத்து
குஞ்சுகளைப் பார்த்து நான் உங்களைவிட அழகாக
கிறேன் என்று கூறியது. ஒரு நாள் தாய் வாத்து ஐந்து
குஞ்சுகளுடன் வெளியே சென்றது. அப்போது செல்லும் வழியில்
நிறவாத்து சேற்றில் விழுந்தது. சேற்றில் விழுந்த பின்
நிற வாத்து அசிங்கமாக இருந்தது. அதைப் பார்த்த
குஞ்சுகளும் சிரித்தன. அந்த வண்ண நிற வாத்து தான்
செய்த தப்பை உணர்ந்தது. அதன் பிறகு தாய் வாத்தும் ஐந்து
குஞ்சுகளும் அதன் விட்டில் மகிழ்ச்சியாக வாழ்ந்து வந்தன



# நேர்மை தந்த பரிசு...






செ.மீனாட்சி
வகுப்பு 5,
ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி பெரும்பாண்டி,
கும்பகோணம் வட்டம், தஞ்சாவூர் மாவட்டம்.

ஓர் ஊரில் இராமன், இலட்சுமணன் என்று இரண்டு அண்ணன் தம்பிகள் வாழ்ந்து வந்தனர். இரண்டு பேரும் பால் வியாபாரம் செய்து வந்தனர். இராமன், பாலில் சரிக்கு சரி தண்ணீர் கலந்து விற்பார். ஆனால் இலட்சுமணன் எல்லோருக்கும் மிகச் சரியாக அளந்து தருவார். இராமன் பால் வியாபாரத்தில் எப்போதும் ஏமாற்று வேலை செய்து கொண்டே இருப்பார். இதனை ஒரு நாள் பார்த்த இலட்சுமணன் இவ்வாறு செய்வது தவறு என்று அண்ணனிடம் கூறினார். பேராசை கொண்ட இராமன், தம்பி சொன்னதைக் கேட்காமல் திரும்பத் திரும்ப தவறு செய்தார். சில நாட்கள் கழித்து இராமனிடம் யாரும் பால் வாங்கவில்லை. இலட்சுமணன் அதே ஊரில் பால் வியாபாரம் செய்து அதிக லாபத்தை பெற்றார். இதனால் இராமன், இலட்சுமணன் மீது கோபம் கொண்டார்.

பிறகு கோபம் கொண்ட இராமன், இலட்சுமணன் வியாபாரத்தை தடுக்க பல திட்டங்களை தீட்டினார். இவை அனைத்தையும் எதிர்த்து இலட்சுமணன் அதே ஊரில் பால் வியாபாரம் செய்து பெரிய வீட்டை கட்டினார். அதைப் பார்த்த இராமன் பேராசை பெருநஷ்டம் என்று உணர்ந்தார். பிறகு அண்ணன் தம்பி இருவரும் ஒரே வீட்டில் சேர்ந்து வாழ்ந்து வந்தனர்.

மீன் யாருக்கு ...



ஓர் ஊரில் இரண்டு சேவல்கள் ஒரு மீனுக்காக சண்டை போட்டுக் கொண்டிருந்தன அப்பொழுது கொக்கு நதியில் மீனுக்காக காத்துக்கொண்டு இருந்தது கொக்கிற்கு மீன் ஒன்றும் கிடைக்கவில்லை

அப்போது சேவல்கள் மீனுக்கு சண்டை போடுவதை பார்த்து கொக்கு சேவலிடம் "சண்டை போடாதீர்கள்" என்று சொன்னது சேவல்கள் சண்டையை நிறுத்தியது "நீங்கள் ஏன் இந்த மீனுக்காக சண்டை போடுகிறீர்கள்" என்று கொக்கு கேட்டது

"அண்ணா யாருக்கு தான் இந்த மீன் என்று சொல்லுங்கள்" என்று சேவல்கள் கொக்கிடம் கேட்டன உடனே கொக்கு "யார் உயரமானவரோ அவருக்குத்தான் இந்த மீன்" என்று சொன்னது "எனக்குத்தான் இந்த மீன் நான் தான் உங்களை விட உயரமானவன்" என்று சொல்லி கொக்கு மீனை எடுத்துக் கொண்டது

சேவல்கள் ஏமாந்தன கவலைப்பட்டன



செ.ஜனனி
வகுப்பு 5
ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி
பெரும்பாண்டி, கும்பகோணம் வட்டம்,
தஞ்சாவூர் மாவட்டம்



"பூக்குட்டிகளின் கதை மொட்டுகள்" என்ற சிறார் புத்தகத்தில் கதைகள் எழுதிய குழந்தைகள் எனும் தேன்சிட்டுகளுக்கு வாழ்த்துகள். " *The Destiny of a Nation is shaped within the four walls of classrooms*" என்பதற்கு ஏற்ப நாளைய வலிமையான வளமான இந்தியாவினை உருவாக்கும் பொறுப்பினை உடைய ஆசிரியர்களுள், இனிமை நிறைந்த மகிழ்வான கற்றல் சூழலை ஏற்படுத்தி மாணவர்களை மகிழ்வித்து பல துறைகளிலும் முன்னேற அடித்தளம் அமைக்கும் சிறந்த அர்ப்பணிப்பு உணர்வோடு பணியாற்றும் ஆசிரியர்களில் ஒருவராகத் திகழும் சுதாமாணிக்கம் அவர்களுக்கு எனது பேரன்புகளையும், வாழ்த்துகளையும் மகிழ்வுடன் தெரிவிப்பதில் பெருமிதம் அடைகிறேன். ஆசிரியை சுதாமாணிக்கம் அவர்களின் சிறிய புத்தகப்பணி மென்மேலும் தொடர வாழ்த்துகள்.

அன்பான வாழ்த்துகளுடன்

திருமிகு.மா.திலகவதி M.A, B. Ed

அரசினர் உயர்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியை (ஓய்வு)

மணக்காடு, தஞ்சை மாவட்டம்.

Price ரூ 300.00
000-000045060-5
0000000450605